Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935



# 'ஏஐ' உச்சி மாநாட்டில் பங்கேற்க பிரான்ஸ் புறப்பட்டார் பிரதமர் மோடி

சென்னை, 11 பிப்ரவரி 2025: பிரதமர் நரேந்திர மோடி செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) உச்சி மாநாட்டில் பங்கேற்க பிரான்ஸ் புறப்பட்டுள்ளார்.

பிரதமர் மோடி பிரான்ஸ் நாட்டுக்கு 12ந்தேதி வரை 3 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இதற்காக அவர் இன்று டெல்லியில் இருந்து விமானத்தில் புறப்பட்டு சென்றுள்ளார். பிரான்சின் பாரீஸ் நகரில் நடைபெற உள்ள ஏ.ஐ. உச்சி மாநாட்டில் உலக நாடுகளின் தலைவர்கள், தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகள் என பலரும் கலந்து கொள்கின்றனர்.



இதனை தொடர்ந்து அங்கு பிரான்ஸ் அதிபர் மேக்ரானுடன் இணைந்து பிரான்சில் முதல் இந்திய துணைத் தூதரகத்தைத் திறந்து வைக்கிறார். மேலும் மார்சேயில் சர்வதேச வெப்ப அணுசக்தி பரிசோதனை உலை திட்டத்தைப் இருவரும் பார்வையிடுவார்கள்.

அதன் பின்னர் பிரான்சிலிருந்து, அதிபர் டொனால்டு டிரம்பின் அழைப்பின் பேரில், பிரதமர் மோடி அமெரிக்காவுக்கு புறப்பட்டு செல்வார். அந்நாட்டில் மோடி 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்வார்.

# பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவில் ஜனாதிபதி திரவுபதி முர்மு புனித நீராடல் 300 கி.மீ. தூரம் போக்குவரத்து நெரிசல்

சென்னை, 11 பிப்ரவரி 2025: உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் திரிவேணி சங்கமத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு புனித நீராடினார்.



உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா நடைபெற்று வருகிறது. கடந்த ஜனவரி 13ம் தேதி தொடங்கிய இந்நிகழ்வு பிப்ரவரி 26ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதற்காக 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இந்த கும்பமேளாவில் பொது மக்கள் மட்டுமின்றி அரசியல் தலைவர்கள், பிரபலங்கள் என பலரும் புனித நீராடி வருகின்றனர்.

அந்த வகையில் பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், எதிர்க்கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி உள்ளனர்.

இந்த ஆன்மிக நிகழ்வில் பல நடிகர், நடிகைகளும் புனித நீராடி வருகின்றனர். அந்தவகையில், நேற்று நடிகர் விஜய் தேவரகொண்டா தனது தாயுடன் புனித நீராடினார். மகா கும்பமேளாவில் இதுவரை 41 கோடிக்கு மேற்பட்டோர் புனித நீராடி உள்ளனர்.

இந்த நிலையில் இன்று அதிகாலை பிரயாக்ராஜுக்கு வந்த ஜனாதிபதியை மாநில கவர்னர் ஆனந்திபென் படேல், முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் ஆகியோர் வரவேற்றனர். அதன்பின்னர் படகில் பயணித்த திரவுபதி முர்மு, பிரயாக்ராஜுக்கு வந்துள்ள புலம்பெயர்ந்த பறவைகளுக்கு உணவளித்தார்.

இதையடுத்து பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் பூக்களை தூவி ஜனாதிபதி திரவுபதி முர்மு புனித நீராடினார். தனது இந்த பயணத்தின்போது அக்ஷயவத் மற்றும் ஹனுமான் கோயில்களில் பூஜையும் சாமி தரிசனமும் செய்ய உள்ளார். மேலும் டிஜிட்டல் கும்ப அனுபவ மையத்தையும் அவர் பார்வையிடுவார் என்று ஜனாதிபதி மாளிகை தெரிவித்துள்ளது.

300 கி.மீ., தூரம் போக்குவரத்து நெரிசல்

கும்பமேளாவுக்கு நீராடுவதற்காக அதிகளவில் பக்தர்கள் வந்ததால், 300 கி.மீ., தூரம் வரை போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

வரும் 26ம் தேதி வரை நடக்கும் இந்நிகழ்வில் பங்கேற்க இன்னும் பலர் வந்த வண்ணம் உள்ளனர். நேற்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் லட்சக்கணக்கான பக்தர்கள் பிரயாக்ராஜ் நகரை நோக்கி வந்தனர். இதனால், அந்நகரை நோக்கி செல்லும் சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இது 300 கி.மீ., தூரம் வரை நீண்டதாக பக்தர்கள் கூறுகின்றனர்.

இதனையடுத்து, பல மாவட்டங்களில் போலீசார், பக்தர்கள் செல்லும் வாகனங்களை வேறு பாதையில் திருப்பிவிட்டனர். அதுவும் முடியாத காரணத்தினால், வாகனங்களை தடுத்து நிறுத்தினர்.

புனித நீராடுவதற்காக பிரயாக்ராஜ் நகரை அடைவதற்கு ஒரு நாள் ஆகிறது என பக்தர்கள் கூறி உள்ளனர்.






# தமிழக பட்ஜெட் தொடர்பாக விவாதிக்க மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை கூட்டம்

சென்னை, 11 பிப்ரவரி 2025: தமிழக பட்ஜெட் தொடர்பாக விவாதித்து முடிவு எடுப்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெற்றது.



இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அனைத்து அமைச்சர்களும் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் தமிழக அரசின் 2025 2026ம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் தேதி குறித்து விவாதிக்கப்பட்டது. பட்ஜெட்டில் இடம்பெற வேண்டியவை முக்கிய அம்சங்கள் குறித்து அமைச்சர்கள் துறை ரீதியாக ஆய்வு செய்து, கருத்துகளைப் பெற்றுள்ளனர். அந்தக் கருத்துகள் இந்த அமைச்சரவை கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு, அதன் அடிப்படையில் முடிவு எடுக்கப்பட்டு அமைச்சரவை கூட்டத்தின் முடிவில், பட்ஜெட் அறிக்கைக்கு ஒப்புதல் தரப்படும்.

அடுத்த ஆண்டு மே மாதம் தமிழக சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு முன்பு கடைசியாக தாக்கல் செய்யப்படும் முழு பட்ஜெட் இதுதான். அதனால், இந்த ஆண்டு பட்ஜெட்டில் பல்வேறு திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய பட்ஜெட்டில் மக்களை கவரும் வகையில் கவர்ச்சிகரமான அறிவிப்புகள் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

மேலும், தமிழ்நாட்டில் புதிதாக தொடங்கப்பட உள்ள தொழில்கள், விரிவாக்கம் செய்யப்பட உள்ள தொழில்கள் ஆகியவற்றிற்கும் இந்த அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட உள்ளது. அதனால் இன்று நடைபெறும் அமைச்சரவை கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

தமிழக சட்டசபையின் இந்த ஆண்டுக்கான முதல் கூட்டம் கடந்த ஜனவரி 6ம் தேதி கவர்னர் உரையுடன் தொடங்கியது. தொடக்கத்தில் தேசிய கீதம் பாடப்படாததை காரணம் காட்டி, உரையை வாசிக்காமல் கவர்னர் ஆர்.என்.ரவி சட்டசபையில் இருந்து வெளியேறினார். இதையடுத்து கவர்னர் உரையின் தமிழாக்கத்தை சபாநாயகர் அப்பாவு வாசித்தார்.

கவர்னர் உரைக்கு நன்றி

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம், கடந்த ஜனவரி 8-ம் தேதி முதல் 10-ம் தேதி வரை நடைபெற்றது. அந்த விவாதத்துக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 11ம் தேதி பதில் அளித்தார். அதில் மொத்தம் 6 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. இதைத் தொடர்ந்து தேதி குறிப்பிடாமல் சட்டசபை ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் அப்பாவு அறிவித்திருந்தார்.

இந்நிலையில், 2025 2026ம் நிதி ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் பட்ஜெட் மார்ச் முதல் வாரத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளது. முதல் நாளில் பொது பட்ஜெட்டை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, அடுத்த நாள் வேளாண் பட்ஜெட்டை வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் ஆகியோர் தாக்கல் செய்வார்கள்.

# சென்னை தலைமைச் செயலகத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களின் "மதி அனுபவ அங்காடி": துணை முதலமைச்சர் உதயநிதி திறந்து வைத்தார்

சென்னை, 11 பிப்ரவரி 2025: சென்னை தலைமைச் செயலகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் மதி அனுபவ அங்காடியினை இன்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார்.

கலைஞர், பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடையவேண்டும் என்பதற்காக 1989 ம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களை தொடங்கி வைத்தார். மகளிரின் முன்னேற்றத்திற்காக, துவங்கப்பட்ட இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தியதின் காரணமாக பிற மாநிலங்களாலும் பின்பற்றப்பட்டு பெண்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு ஒரு முன்னோடி திட்டமாக விளங்குகிறது.

முதலமைச்சர் ஸ்டாலின் சுயஉதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அத்திட்டங்களின் பயனாக இன்று சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டி, பொருளாதார சுயசார்பு பெற்று வருகின்றனர்.

முதலமைச்சர் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாநில, மாவட்ட, வட்டார அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள், மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள், மதி அங்காடி, மதி இணையதளம், மதி சிறுதானிய உணவகம் மற்றும் இயற்கைச் சந்தைகள் என பல்வேறு செயல்பாடுகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வருவதன் காரணமாக இன்று சுய உதவிக் குழுக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, "மதி அனுபவ அங்காடி" தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் துணை முதலமைச்சரால் 18.11.2023 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

மகளிர் சுய உதவிக் குழுவினர் தங்களின் தயாரிப்புப் பொருட்களை நியாயமான முறையில் விற்பனை செய்து, வருமானம் ஈட்டுவது மதி அனுபவ அங்காடியின் தனிச்சிறப்பு. இந்த மதி அனுபவ அங்காடியில் தமிழ்நாட்டில் உள்ள 37 மாவட்டங்களில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மதி அனுபவ அங்காடிக்கு பொதுமக்கள் அளித்த வரவேற்பினைத் தொடர்ந்து, சென்னை தலைமைச் செயலகத்தில் இரண்டாவது மதி அனுபவ அங்காடியினை உதயநிதி ஸ்டாலின் இன்று துவக்கி வைத்தார்.

இந்த மதி அனுபவ அங்காடியில் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிரால் உற்பத்தி செய்யப்படும் "மதி" என்ற வணிக முத்திரையுடன் கைவினைப் பொருட்கள், கைத்தறி துணிகள், தேன், நாட்டுச்சர்க்கரை, சிறுதானிய உணவு பொருட்கள், அலங்கார பொருட்கள், ஆபரணங்கள், சிலைகள், உணவுப் பொருட்கள், சிறுதானியங்கள் மற்றும் வீட்டிற்குத் தேவையான மளிகைப் பொருட்கள் உள்பட அனைத்துப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பி.மூர்த்தி, பி.கே.சேகர்பாபு, கோவி.செழியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் ஸ்ரேயா பி.சிங் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

செவ்வாய்,
பிப்ரவரி 11, 2025

# தென்னிந்தியாவில் திறன் மற்றும் இருப்பு விரிவாக்கத்துடன் 2025-ல் 10% வளர்ச்சி எதிர்நோக்கும் இன்டரார்க்

சென்னை, 11 பிப்ரவரி 2025: இன்டரார்க் பில்டிங் புராடக்ட்ஸ் லிமிடெட் (பிஎஸ்இ குறியீடு: 544232) (என்எஸ்இ: இன்டரார்க்) ஆனது முன்-பொறியியல் கட்டிடங்கள் (பிஇபி) மற்றும் எஃகு கட்டமைப்பு துறையில் முன்னணி நிறுவனமாகும். தென்னிந்தியாவின் வளர்ந்து வரும் உள்கட்டமைப்பு தேவைகளைப் பூர்த்தி செய்ய அதன் நிலையை வலுப்படுத்தி வருகிறது. நிலையான கட்டிட நடைமுறைகள், அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் புதுமையான தீர்வுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, நிறுவனம் தென்னிந்திய மாநிலங்களில் செயல்பாடுகளை வணிக ரீதியாக விரிவுபடுத்துகிறது.



இன்டரார்க் நிறுவனம் ஆனது ஸ்ரீபெரும்புதூர் (தமிழ்நாடு), பந்த்நகர், கிச்சா (உத்தரகாண்ட்) மற்றும் அதிவரத்தில் (ஆந்திரப் பிரதேசம்) சமீபத்தில் நிறுவப்பட்ட ஆலைகள் உட்பட, இந்தியா முழுவதும் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட, அதிநவீன உற்பத்தி ஆலைகளை இயக்குகிறது. இது மேலும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. சென்னை ஆலை, தென்னிந்தியாவில் நிறுவனத்தின் வளர்ச்சி உத்தியை ஆதரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும். நிலையான மற்றும் உயர்தர முன்-பொறியியல் கட்டிடம் (பிஇபி) தீர்வுகளுக்கான அதிகரித்து வரும் தேவையை நிவர்த்தி செய்கிறது.

இன்டரார்க்கின் ஸ்ரீபெரும்புதூர் ஆலை குறித்து ஊடகங்களுடன் உரையாடும்போது, இன்டரார்க் பில்டிங் புராடக்ட்ஸ் லிமிடெட்டின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. மணீஷ் குமார் கார்க், இன்டரார்க்கின் முன் பொறியியல் கட்டிடங்கள் (பிஇபி) எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன என்பதற்கான விரிவான கண்ணோட்டத்தை வழங்கினார்.

வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்தில் புதுமைகளை ஊக்குவிப்பதைத் தவிர, ஸ்ரீபெரும்புதூர் ஆலை ஆனது குறைக்கடத்திகள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற வளர்ந்து வரும் துறைகளுக்கும், டாடா செமிகண்டக்டர்ஸ், அகார்டாஸ் எனர்ஜி, ஹேவல்ஸ், ப்ளூ ஸ்டார் மற்றும் அமரா ராஜா எனர்ஜி & மொபிலிட்டி லிமிடெட் போன்ற, ாடிக்கைகயாளர்களுக்கும் தொழிற்சாலைகளை உற்பத்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

"எங்கள் நிலையான மற்றும் அளவிடக்கூடிய தீர்வுகள் மூலம் தென்னிந்தியாவின் உள்கட்டமைப்பு தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நாங்கள் முன்னணியில் இருக்கிறோம், குறிப்பாக குறைக்கடத்திகள், புதுப்பிக்கத்தக்கவை மற்றும் தரவு மையத் துறையில் வேகமாக வளர்ந்து வரும் தேவையை பூர்த்தி செய்கிறோம். நிலைத்தன்மையில் ஆழமான கவனம் செலுத்தி அதிநவீன தொழில்நுட்பத்தை இணைப்பதன் மூலம், பிராந்தியத்தின் வளர்ச்சியில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். எங்கள் முயற்சிகள், இன்றைய மற்றும் நாளைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆற்றல்-திறனுள்ள, நெகிழ்வான தீர்வுகளுடன் பிராந்தியத்தின் வளர்ச்சியை ஆதரிப்பதில் உறுதிபூண்டுள்ள. அதன்படி, முன்-பொறியியல் கட்டிடத் துறையில் எங்கள் தலைமையை மேலும் வலுப்படுத்துகின்றன," என்று திரு. கார்க் கூறினார்.

சென்னையில் உள்ள இன்டரார்க் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையமானது நிறுவனத்தின் வெற்றியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த மையம், தொழில்துறை திட்டங்கள் முதல் தரவு மையங்கள் வரை பல்வேறு துறைகளில் மதிப்பு-பொறிமுறை தீர்வுகளை வழங்குவதில் கவனம் செலுத்துகிறது, அதே நேரத்தில் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி செயல்முறைகளை மேம்படுத்துகிறது. கையேடு செயல்முறைகளிலிருந்து தானியங்கி செயல்முறைகளுக்கு ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது, இது திட்ட காலக்கெடுவை 30% வரை குறைக்கும் ஏஐ தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது. கூடுதலாக, தனிப்பயன் கருவிகளின் மேம்பாடு செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும். இந்த நிறுவனம் அதன் ஜிஇதி/பிஜிஇதி முயற்சிகள் மூலம் புதிய திறமையாளர்களைப் பயிற்றுவிப்பதிலும் வழிகாட்டுவதிலும் கவனம் செலுத்துகிறது, எதிர்கால வளர்ச்சிக்கு வலுவான பணியாளர்களை உறுதி செய்கிறது.

வலுவான வணிக செயல்திறனை பிரதிபலிக்கும் வகையில், நிலையான, உயர்தர பிஇபி தீர்வுகளுக்கான தொடர்ச்சியான தேவையால் இயக்கப்பட்டுவதால், எஃப்ஒய்25 இல் இன்டரார்க் ஆனது 10% வருவாய் வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளது. எஃப்ஒய்26 இல், தொடர்ச்சியான விரிவாக்க முயற்சிகள் மற்றும் வலுவான ஆர்டர் ஆகியவற்றால், திட்டமிடப்பட்ட 10-15% வளர்ச்சியுடன் அதன் வேகத்தைத் தக்க வைத்துக் கொள்ள நிறுவனம் செயல்பட்டுவருகிறது.

அதன் நீண்டகால வளர்ச்சி உத்தியின் ஒரு பகுதியாக, இன்டெர்ராக் ஆனது 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 200,000 மெட்ரிக் டன் நிறுவப்பட்ட திறனை அடைய இலக்கு வைத்துள்ளது. இது அதன் கிச்சா ஆலை மற்றும் பிற முக்கிய ஆலைகளின் திறன் விரிவாக்கங்களால் இயக்கப்படுகிறது.

# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் 10-02-2025 நிகழ்வுகள்

சென்னை, 11 பிப்ரவரி 2025: 1. நகைக் கடன் பிரிவில் வாராக்கடன் அதிகரிப்பதன் காரணம் என்ன?

தூத்துக்குடி எம்.பி. கனிமொழி கருணாநிதி கேள்வி

அண்மையில் ரிசர்வ் வங்கியின் வெளியிட்டுள்ள தரவுகளின்படி 2024-25ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தங்கக் நகைக் கடன் பிரிவில் வாராக்கடன் 30% அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளதை குறித்து கேட்டு திமுக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.

வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (என்பிஎஃப்சி) வாரியாக கடந்த ஐந்து ஆண்டுகளில் தங்கக் கடன்களிலிருந்து எழும் செயல்படாத சொத்துக்களின் (என்பிஏக்கள்) விவரங்கள், மார்ச் 2024இல் 1513 கோடி ரூபாயாக இருந்த வணிக வங்கிகளின் தங்கக் கடன் செயல்படாத சொத்துகள் ஜூன் 2024இல் 62% உயர்ந்து ரூ. 2445 கோடியாகியுள்ளதாக வெளியாகும் தகவல்களின் உண்மைத்தன்மை என்ன? நடப்பு நிதியாண்டில் வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்களின் ஒட்டுமொத்த கடன் இலாகாவில் தங்கக் கடன் செயல்படாத சொத்துகளின் சதவீதம் மற்றும் தங்கக் கடன் துறையில் செயல்படாத சொத்துக்களின் அபாயத்தைக் குறைக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள், தங்கக் கடன் வழங்கல்களில் சரியான மதிப்பீடு மற்றும் இடர் மதிப்பீட்டை உறுதி செய்யும் அதே வேளையில், சிறு கடன் வாங்குபவர்களுக்கான கடன் அணுகலை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்கிற விவரங்களையும் அதில் அவர் கோரியுள்ளார்.

2. வரைவு யுஜிசி விதிமுறைகளின் 2025 ரத்து செய்க

சேலம் திமுக எம்.பி. செல்வகணபதி வலியுறுத்தல்

பல்கலைக்கழக மானிய ஆணையத்தால் (யுஜிசி) வெளியிடப்பட்ட வரைவு விதிமுறைகள், 2025இன் முக்கிய அம்சங்கள் மற்றும் நோக்கங்கள் என்ன என்பதை விளக்குமாறு மக்களவையில் சேலம் எம்.பி. செல்வகணபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் வரைவு விதிமுறைகள், 2025 இல் உள்ள பல விதிகள் மாநில பல்கலைக்கழகங்களின் கல்வி சுதந்திரம், சுயாட்சி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு எதிராக உள்ளது.

இந்த விதிமுறைகள் மாநில அரசுகளின் உரிமைகளை முழுமையாக மீறுவதாகவும், மாநில பல்கலைக்கழகங்களின் சுயாட்சிக்கு நீண்டகால பாதிப்புகளை ஏற்படுத்தும்.

பல மாநில சட்டமன்றங்கள் யுஜிசி வரைவு விதிமுறைகளுக்கு எதிராக ஒருமனதாக தீர்மானங்களை நிறைவேற்றியுள்ள நிலையில் இந்த புதிய வரைவு விதிமுறைகளை அரசாங்கம் திரும்பப் பெற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

3. பெண்களுக்கு பணியிட பாதுகாப்பை உறுதி செய்க!

தருமபுரி திமுக எம்.பி. அ. மணி வலியுறுத்தல்

அன்றாட கூலியாக பணிபுரியும் பெண்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டங்களை உருவாக்குமாறு தருமபுரி தொகுதி மக்களவை உறுப்பினர் அ. மணி நாடாளுமன்ற கேள்வி நேரத்தில் வலியுறுத்தியுள்ளார். அதில் அவர் அன்றாடம் கூலி பெறும் பெண்களுக்கு ஊதிய ஏற்றத் தாழ்வுகளை தடுக்கவும் பணியிடப் பாதுகாப்பை உறுதி செய்யவும் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

4. தொழிலாளர் காப்பீட்டுக் கழகத்தின் திட்டங்களை மேம்படுத்துக


கள்ளக்குறிச்சி எம்.பி. மலையரசன் கோரிக்கை

தொழிலாளர் காப்பீட்டுக் கழகத் (இஎஸ்ஐசி) திட்டத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு வழங்கும் சலுகைகள் பற்றிய விவரங்கள் கேட்டு கள்ளக்குறிச்சி தொகுதி திமுக எம்.பி மலையரசன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில், கள்ளக்குறிச்சி தொகுதி உட்பட நாடு முழுவதும் இஎஸ்ஐசி திட்டத்தின் கீழ் பயனடையும் பயனாளிகளின் எண்ணிக்கை குறித்த புள்ளி விவரங்களை கேட்டுள்ள அவர், அதிகரித்து வரும் பயனாளிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் இஎஸ்ஐசி வசதிகளை மேம்படுத்த வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.

# திருவல்லிக்கேணி பகுதியில் உள்ள கல்லூரியில் கட்டுமான பணிக்காக வைத்திருந்த இரும்பு கம்பிகளை திருடிச் சென்ற நபர் கைது. 35 கிலோ எடை கொண்ட இரும்பு கம்பிகள் பறிமுதல்.

சென்னை, 11 பிப்ரவரி 2025: சென்னை, தண்டையார்பேட்டை பகுதியில் வசித்து வரும் சீனிவாசன், வ/65, த/பெ.லோகநாதன் என்பவர் சேப்பாக்கம் இரயில் நிலைய கார் பார்க்கிங்கில் காவலாளியாக வேலை செய்து வருகிறார். இவர் 09.02.2025 அன்று மதியம், மேற்படி கார் பார்க்கிங்கில் பணியிலிருந்தபோது, அருகே உள்ள மாநில கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வரும் கட்டுமான பணிக்காக வைத்திருந்த இரும்பு கம்பிகளை 2 நபர்கள் திருடி சாக்குப்பையில் எடுத்துக் கொண்டு வெளியே வந்தபோது,



சீனிவாசன் அவர்களை பிடிக்க முற்பட்ட போது, இருவரும் சீஹீவாசனை கீழே தள்ளிவிட்டு, சாக்குப் பையுடன் தப்பிச் சென்றனர். இது குறித்து காவலாளி சீனிவாசன் டி-6 அண்ணாசதுக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

டி-6 அண்ணா சதுக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்திற்கு சென்று, தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட அப்பு (எ) தனுஷ், வ/22, த/பெ.சீனிவாசன், குதிரை தல்லி மக்கா தெரு, லாயிட்ஸ் ரோடு, ஐஸ்ஹவுஸ், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து மேற்படி இடத்தில் இருந்து திருடிய 35 கிலோ எடை கொண்ட இரும்பு கம்பிகள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட அப்பு (எ) தனுஷ் அவரது நண்பர் குணா என்பவருடன் சேர்ந்து மேற்படி இரும்பு கம்பிகளை திருடிச் சென்றதும், இவர் மீது ஏற்கனவே 3 திருட்டு வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி அப்பு (எ) தனுஷ் விசாரணைக்குப் பின்னர் 10.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளார். இவ்வழக்கில் சம்பந்தப்பட்டு தலைமறைவாக உள்ள குணா என்பவரை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# ஐஸ் அவுஸ் பகுதியில் நள்ளிரவு வீடு புகுந்து தங்க நகைகளை திருடிச் சென்ற பழைய குற்றவாளி கைது.

சென்னை, 11 பிப்ரவரி 2025: சென்னை, இராயப்பேட்டை, முத்தையா 2 வது தெருவில் உள்ள வீட்டின் முதல் தளத்தில் குடும்பத்துடன் வசித்து வரும் ரமா, பெ/55, க/பெ.ராமானுஜம் (உதவி மேலாளர், துறைமுகம்) என்பவர் 08.02.2025ம் தேதி இரவு அவரது வீட்டில் தூங்கி, மறுநாள் (09.02.2025) காலை பார்த்தபோது, யாரோ பால்கேனி வழியாக வீட்டில் நுழைந்து பீரோவில் வைத்திருந்த சுமார் 110 கிராம் எடை கொண்ட தங்க நகைகளை திருடிச் சென்றதாக ரமா டி-3 ஐஸ் அவுஸ் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின் பேரில், வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப் பட்டது. மேலும், அதே தெருவிலுள்ள ஒரு வீட்டின் 3வது தளத்தில் உள்ள வீட்டிலும் ஒரு நபர் செல்போன் திருடிச் சென்றது தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப் பட்டது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்கள் உத்தரவின்பேரில், இணை ஆணையாளர் (கிழக்கு மண்டலம்) அவர்கள் தனிப்படை அமைத்து, டி-3 ஐஸ் அவுஸ் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் சம்பவ இடங்களில் தீவிர விசாரணை செய்தும், சிசிடிவி கேமரா பதிவுகளை கண்காணித்தும், மேற்படி 2 திருட்டிலும் ஈடுபட்டது பழைய குற்றவாளி எனத் தெரியவந்தது.

அதன்பேரில் தனிப்படையினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி 2 வழக்குகளிலும் தொடர்புடைய எதிரி ராஜு (எ) பாக்கு ராஜு, வ/37, த/பெ. லோகநாதன், இராயபுரம், சென்னை என்பவரை 10.02.2025 அன்று கைது செய்தனர். அவரிடமிருந்து திருடப்பட்ட வழக்கு சொத்துக்கள் மீட்கப்பட்டது.

மேலும் விசாரணையில் எதிரி ராஜு கடந்த ஜனவரி மாதம் ஜாம்பஜார் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஒரு வீட்டில் நான்கு செல்போன்கள் திருடி கைது செய்யப்பட்டு, சிறைக்கு சென்று வந்தவர் என்பதும் யெூரியவந்தது.

கைது செய்யப் பட்ட எதிரி ராஜு விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## கொருக்குப்பேட்டை பகுதியில் சட்டவிரோதமாக கஞ்சா வைத்திருந்த வடமாநிலத்தைச் சேர்ந்த 2 நபர்கள் கைது. 3 கிலோ கஞ்சா பறிமுதல்.

சென்னை, 11 ஜனவரி 2025: சென்னை பெருநகர காவல், எச்-4 கொருக்குப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், தனிப்படையினர் 10.02.2025 அன்று காலை, கொருக்குப் பேட்டை, கண்ணன் ரோடு, ரங்கநாதபுரம் ஹவுசிங் போர்டு அருகே கண்காணித்து, அங்கு சந்தேகப் படும்படி நின்றிருந்த 2 நபர்களை விசாரணை செய்தபோது, அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்தனர். சந்தேகத்தின்பேரில், அவர்கள் வைத்திருந்த பையை சோதனை செய்தபோது, அதில் விற்பனைக்காக கஞ்சா மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், எச்-4 கொருக்குப்பேட்டை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, சட்டவிரோத விற்பனைக்காக கஞ்சா வைத்திருந்த 1.திபுன் திகால், வ/19, த/பெ.சரண்குமார் திகால், பலிகுடா, கந்தமாள் மாவட்டம், ஒரிசா மாநிலம், 2.பிபேக் நாயக், வ/19, த/பெ.ராதிகா நாயக், உர்லாடனி, மதன்பூர்ராம்பூர், கலஹந்தி, ஒரிசா மாநிலம் ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 3 கிலோ எடை கொண்ட கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் 10.02.2025 நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளனர்.

## புளியந்தோப்பு பகுதியில் பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த நபர் கைது.

சென்னை 11, பிப்ரவரி 2025: சென்னை, புளியந்தோப்பு பகுதியில் வசித்து வரும் 21 வயது பெண் தெருவில் செல்லும்போது அதே பகுதியைச் சேர்ந்த கருணாகரன் என்பவர் ஆபாசமாகவும், உடல் அங்கங்களை விமர்சித்தும் சத்தமாக பேசி பாலியல் தொந்தரவு கொடுத்து வந்த நிலையில், கருணாகரன் மேற்படி பெண்ணின் காதலனிடம் அப்பெண்ணை பற்றி தவறாகவும், அவதூறாகவும் பேசி நடக்க இருந்த திருமணத்தை தடுத்து நிறுத்தியுள்ளதால், இது குறித்து அப்பெண்ணின் தந்தை, கருணாகரனிடம் ஏன் இவ்வாறு செய்கிறாய் என கேட்டபோது, கருணாகரன் நான் அப்படிதான் செய்வேன் எனக் கூறி மிரட்டி அனுப்பியுள்ளார். இது குறித்து பாதிக்கப்பட்ட அந்த பெண் டபிள்யு-16 புளியந்தோப்பு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (பிஎன்எஸ் ஆக்ட்) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் (திஎன்பிஎச்டபிள்யு ஆக்ட்) உள்ளிட்ட சட்டப் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

டபிள்யு-16 புளியந்தோப்பு அனைத்து மகளிர் காவல் நிலைய (டபிள்யு-16 ஏடபிள்யுபிஎஸ்) ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கருணாகரன், வ/52, த/பெ. முத்துராமலிங்கம், கால்வாய்கரை, கன்னிகாபுரம், சென்னை என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி கருணாகரன் மீது ஏற்கனவே 2023ம் ஆண்டு ஒரு பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தது தொடர்பாக பி-1 புளியந்தோப்பு காவல் நிலையத்தில் ஒரு வழக்கு உள்ளது.

கைது செய்யப்பட்ட கருணாகரன் விசாரணைக்குப் பின்னர் 09.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## சென்னை தேனாம்பேட்டை அண்ணா அறிவாலயத்தில் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி செய்தியாளர்களைச் சந்தித்தது குறித்த அறிக்கை.

சென்னை, 11 ஜனவரி 2025: ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் திமுக கூட்டணி 1 லட்சத்து 15 ஆயிரத்து 709 ஓட்டுகள் பெற்று வெற்றி பெற்றுள்ளது. திமுகவின் நான்கு ஆண்டுகால ஆட்சியில் ஆட்சிக்கு எதிரான அலை இல்லை, ஆதரவு அலைதான் வீசுகிறது என்று இதன் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. 2024 நாடாளுமன்ற தேர்தலில் அதிமுக 34 ஆயிரத்து 817 வாக்குகளை பெற்றது. அந்த வாக்குகள் அனைத்தும் திமுகவுக்கு கிடைத்திருக்கிறது. அதிமுக தொண்டர்களும் இன்றைக்கு திராவிட இயக்கத்தை நிலைநிறுத்த கூடிய ஆட்சி தலைவர் தளபதியுடைய ஆட்சி என்பதை உணர்ந்து திமுகவிற்கு வாக்களித்துள்ளனர். எப்போதும் வேறு யாருக்கும் ஓட்டு போடாத மாற்றுக்கட்சிக்காரர்கள் கூட திமுகவிற்கு வாக்களித்திருக்கிறார்கள். அந்த வாக்குகள் அனைத்தும் திமுக கூட்டணிக்கு கிடைத்திருக்கிறது.

எடப்பாடி பழனிச்சாமி பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்ற பிறகு 11 முறை தோல்வி அடைந்திருக்கிறார். தொடர் தோல்வி அடைந்த ஒரு அரசியல் தலைவர் அவராகத்தான் இருக்க முடியும். இதிலிருந்து அதிமுகவை வெற்றிப்பாதையில் அழைத்துச் செல்வதற்கு அவருக்கு எந்தவிதமான தகுதியும் இல்லை என்பது நிரூபணம் ஆகி உள்ளது. அங்கு இருக்கக்கூடிய தலைவர்கள் எல்லாமே வெறுப்போடு இருக்கிறார்கள்.

பழனிசாமி, பாஜக கொண்டு வரும் திட்டங்களை மறைமுகமாக ஆதரிப்பார், வெளியில் பாஜகவை எதிர்ப்பதுபோல நடிப்பார்.

ஈரோடு கிழக்கு தேர்தலில் முதல்வரின் திட்டங்களுக்கு கிடைத்த வெற்றியாக பார்க்கப்படுகிறது. எங்களின் திட்டங்களை பார்த்து திமுகவுக்கு வாக்களித்துள்ளார்கள் என்றால், மக்கள் திராவிட மாடல் ஆட்சியை வரவேற்கிறார்கள் என அர்த்தம்.

திமுக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளவு அவிநாசி திட்டம் முழுமையாக முற்றுப் பெற்றிருக்கிறது.

எடப்பாடி பழனிசாமிக்கு எந்த பயமும் கிடையாது என்பது தவறு, கட்சி அவரது கட்டுப்பாட்டில் இருக்கிறதா என்பது அவரின் முன்னாள் அமைச்சர்களின் பேச்சுகள் எடுத்துக்காட்டாக உள்ளது. கட்டுப்பாட்டில் கட்சியை கொண்டு வருவதற்கு படாத பாடு பட்டு கொண்டிருக்கிறார்.

சீமான் மீது அவதூறு வழக்குகள் பதிவு செய்துவிட்டு நீதிமன்றத்திற்கு சென்று அங்கே வழக்கு தொடர்ந்து கொள்ளலாம். கைது பண்ண வேண்டும் என்பது கட்டாயம் அல்ல, கைது செய்யலாம் செய்யாமலும் விட்டுவிடலாம். நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜராகி குற்றவாளி அல்ல, அவதூறாகப் பேசவில்லை என்பதை நிரூபித்தாக வேண்டும். அவர் அவதூறாகப் பேசினார் என்பது வழக்கு பதிந்து இருக்கும்போது அவர் நீதிமன்றத்திற்கு வந்ததாக வேண்டும். கைது செய்யவேண்டும் என்றால், எத்தனை முறை வேண்டுமானாலும் அவரை கைது செய்யப்பட முடியும். எல்லா ஊர்களிலும் அவர் மீது புகார் கொடுக்கும் போது மொத்தத்தில் புகார்களாக அப்படியாக உள்ளது. புகார் மீது விசாரணை நடத்தி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து அதன் மீது வழக்கு நடத்தப்படும். நீதிமன்றம் அதை பார்த்துக் கொள்ளும்.

இந்து முஸ்லீம் ஒன்றாக தான் தமிழகத்தில் உள்ளனர். புதிதாக மத கலவரத்தை உருவாக்க யாரும் நினைத்தாலும் அதற்கு இடம் கொடுக்க மாட்டோம். நாங்கள் அனைவரையும் சமமாக பார்க்கிறோம். யாரும் யாரையும் ஏமாற்றி விட முடியாது. அந்த பிரச்சனையை எவ்வாறு சுமூகமாகத் தீர்க்க வேண்டும் என முதலமைச்சருக்கு தெரியும். முதலமைச்சர் அதனை சுமூகமாக தீர்ப்பார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது என அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் குற்றம்சாட்டு பொய்யானது; போலியானது. திமுக ஆட்சியில் பெண்களுக்கு தைரியம் வந்துள்ளது, தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை நீதிமன்றத்திலோ காவல் நிலையத்திலோ புகார் கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கக்கூடிய காலம் இதுதான் என்பதை உணர்ந்து பெண்கள் புகார் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். பொள்ளாச்சி சம்பவங்கள் 14 நாள் காத்திருந்து அப்போது கூட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை பெண்கள் அச்சப்பட்டார்கள் அதிமுக அவர் சேர்ந்தவர்கள் வழக்கு பதிவு செய்ய மாட்டார்கள் என அச்சம் அடைந்து பெண்கள் வெளியே வந்து புகார் கொடுக்க தயங்கினார்கள். பெண்கள் பலத்த பாதுகாப்பு இருக்கிறது பெண்ணுரிமை பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையில் பெண்களுக்கு பாதிப்பு ஏற்படும் போது உடனடியாக புகார் கொடுக்க அவர்களுக்கு தைரியத்தை கொடுத்து இருக்கிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை இன்று தலைமைச் செயலகத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் யூலைவர் தொல். திருமாவளவன் சந்தித்துப் பேசினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளார்.

## பாரிமுனை பகுதியில் செல்போன் கடையில் ரகளை செய்து அங்கு வேலை செய்து வந்த பெண்ணை தாக்கிய நபர் கைது.

சென்னை 11, பிப்ரவரி 2025: சென்னை, தண்டையார் பேட்டை, திடீர் நகரில் வசித்து வரும் 19 வயது பெண் ஒருவர் கல்லூரியில் படித்துக் கொண்டு பாரிமுனை, 2வது கடற்கரை சாலையில் உள்ள செல்போன் கடையில் பகுதி நேரமாக வேலை செய்து வருகிறார். அப்பெண் கடந்த 02.02.2025 அன்று மாலை மேற்படி செல்போன் கடையிலிருந்தபோது, அங்கு வந்த ஒரு நபர் மேற்படி செல்போன் கடையின் போர்டுகளை உடைத்து தகராறு செய்தபோது, கல்லால் அடிக்க வந்தபோது, அப்பெண் தடுக்கவே, அந்த நபர் அப்பெண்ணை அவதூறாக பேசி கையால் தாக்கி கீழே தள்ளிவிட்டு கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இது குறித்து பாதிக்கப்பட்ட பெண் பி-1 வடக்கு கடற்கரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (பிஎன்எஸ் ஆக்ட்) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் (திஎன்பிஎச்டபிள்யு ஆக்ட்) உள்ளிட்ட சட்டப் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

பி-1 வடக்கு கடற்கரை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட சந்துரு, வ/23, த/பெ. முருகன், மூர் தெரு பிளாட்பாரம், மண்ணடி, சென்னை என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி சந்துரு மீது ஏற்கனவே ஒரு குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி சந்துரு விசாரணைக்குப் பின்னர் 09.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## மணிப்பூரில் நடந்த இனக் கலவரத்திற்கு பிரதமர் மோடியும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் பொறுப்பேற்க வேண்டும்! கழக நாடாளுமன்றக் குழுத்தலைவர் திருமதி. கனிமொழி கருணாநிதி எம்.பி அறிக்கை.



சென்னை 11, பிப்ரவரி 2025:கடந்த இரண்டு ஆண்டுகாலமாக மணிப்பூரில் கும்பல் வன்முறைகளைத் தூண்டிவிட்டு, ஏராளமான மனித உயிரிழப்புகளுக்கு காரணமாக இருந்த பிரேன் சிங் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

குறிப்பாக மணிப்பூர் கலவரத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்புள்ள முதலமைச்சர், அதற்கு மாறாக கும்பல் வன்முறையைத் தூண்டிவிட்டு நடத்தினார் என்பதற்கான சாட்சியங்கள் உச்சநீதிமன்ற விசாரணையில் வெளிப்பட்டுள்ளன. சிறுபான்மைப் பிரிவினர் மீது வெறுப்புணர்வோடு பேசிய ஒலிப்பதிவு அம்பலப்பட்டு, அதன் உண்மைத்தன்மை வெளிப்பட்டுள்ள நிலையில் பிரேன்சிங் பதவி விலக வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

பிரேன் சிங் முதல்வராக தொடர எதிர்ப்பு தெரிவித்து பாஜக கூட்டணி கட்சியினரும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகளும் தந்த அழுத்தமும் இந்த பதவிவிலகலுக்கு காரணமாகியிருக்கின்றன.

மணிப்பூர் கலவரங்கள் தொடங்கியது முதலே பிரேன் சிங் பதவி விலக வேண்டும், மோடியும் அமித்சாவும் மணிப்பூரில் இயல்புநிலை திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வைத்த கோரிக்கைகள் புறந்தள்ளப்பட்டன. மணிப்பூர் மக்கள் மிகப்பெரிய துயரத்திற்கு ஆளாகி வந்தார்கள். தற்போதும் நிலை மேம்பட்டதாகத் தெரியவில்லை.

மணிப்பூரில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் 220க்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன, 60,000 க்கு மேற்பட்ட மக்கள் மாநிலத்தை விட்டு புலம்பெயர்ந்த அவலம் ஏற்பட்டது. அரசின் நிவாரண முகாம்களில் தங்கியிருந்தவர்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்கள், பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு ஆளானார்கள்.

அரசின் ஆதரவிலும் பாராமுகத்திலும்தான் இந்த கொடுமைகள் அரங்கேற்றப்பட்டன. அப்போதும் ஒன்றிய பாஜக அரசும், மணிப்பூர் பாஜக முதல்வர் பிரேன் சிங்கும் வேடிக்கைத்தான் பார்த்தார்கள்.

மக்களை பிளவுபடுத்தி அவர்களின் மரணத்தின் மீது ஆட்சிசெய்யும் பாஜகவின் பாசிச அரசியலுக்கு மணிப்பூரே சாட்சி. பிரேன் சிங் மட்டுமல்ல அவரை பாதுகாத்து கலவரத்தை கட்டுப்படுத்த தவறிய பிரதமர் மோடியும் உள்துறை அமைச்சர் அமித்சாவும் இதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

அடுத்து யார் முதல்வராக பதவி ஏற்றாலும் அவர்கள் அந்த மாநிலத்தில் மீண்டும் அமைதி திரும்ப செய்ய வேண்டும்.

இனியாவது பாஜக அரசு திருந்தி மணிப்பூர் மக்களிடம் அமைதியும் நிம்மதியும் ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். மணிப்பூரில் நிகழ்ந்த, நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்களை விசாரிக்க நடுநிலையான ஆன தனி ஆணையத்தை அமைக்க வேண்டும்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
செவ்வாய்,
பிப்ரவரி 11, 2025

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ. 2 இலட்சம் உதவிநிதி வழங்கினார்

சென்னை, 11 பிப்ரவரி 2025: கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக இதுவரை ரூ. 6 கோடியே 17 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. 2012 சூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும் 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாக உயர்த்தியும் வழங்கப்படுகிறது. அந்த வகையில் ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்-பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ.6 கோடியே 17 லட்சத்து 90 ஆயிரம். இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 10-02-2025 அன்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏவாக பதவி ஏற்றார் வி.சி.சந்திரகுமார்



சென்னை, 11 பிப்ரவரி 2025: சென்னை தலைமை செயலகத்தில் இன்று ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக வி.சி.சந்திரகுமார் பதவியேற்றார்.

ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதிக்கான இடைத்தேர்தல் கடந்த 5-ந்தேதி நடந்து முடிந்து, அதற்கான வாக்கு எண்ணிக்கை கடந்த 8-ந்தேதி நடந்தது. இதில் ஆளும் தி.மு.க.வை சேர்ந்த வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் 1 லட்சத்து 14 ஆயிரத்து 439 வாக்குகளை பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் சீதாலட்சுமி 23,810 வாக்குகள் பெற்றார்.

இதனால் 90,629 வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளர்கள் அனைவரும் டெபாசிட் இழந்தனர்.

இந்த நிலையில் சென்னை தலைமை செயலகத்தில் உள்ள சபாநாயகர் அறையில் வி.சி.சந்திரகுமார் ஈரோடு கிழக்கு தொகுதியின் எம்.எல்.ஏ.வாக இன்று பதவியேற்றுக் கொண்டார்.

அவருக்கு சபாநாயகர் அப்பாவு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, னு.வ.வேலு, கூட்டணி கட்சி தலைவர்களான திருமாவளவன், செல்வப்பெருந்தகை, வைகோ, முத்தரசன், சண்முகம், கொங்கு ஈஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## விஜய்யை முதலமைச்சர் வேட்பாளராக ஏற்றுக் கொள்பவர்களுடன் கூட்டணி தமிழக வெற்றிக் கழகம் அழைப்பு




சென்னை, 11 பிப்ரவரி 2025: 2026 சட்டமன்ற தேர்தல் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறோம் என்றும், விஜய்யை முதல்-அமைச்சர் வேட்பாளராக ஏற்றுக்கொள்பவர்களுடன் தான் கூட்டணி என்றும் தமிழக வெற்றிக்கழகம் அறிவித்து உள்ளது.

நடிகர் விஜய், கடந்த ஆண்டு பிப்ரவரி 2ந் தேதி தமிழக வெற்றிக்கழகம் என்ற கட்சியை தொடங்கினார். தற்போது கட்சி தொடங்கப்பட்டு 2வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

இதற்கிடையே 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலை மையமாக கொண்டு தேர்தல் பணிகளை விஜய் மேற்கொண்டு வருகிறார். கடந்த சில நாட்களுக்கு முன்பு, அண்ணா தி.மு.க. முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன், ‘2026-ம் ஆண்டு ஒரு முக்கிய கட்சியுடன் கூட்டணி அமையலாம். ஆனால் கூட்டணி தொடர்பான முடிவு, அந்த நேரத்தில்தான் எடுக்கப்படும்’ என்று கூறி இருந்தார்.அவர் குறிப்பிட்டது தமிழக வெற்றிக்கழகத்தை தான் என்றும், அ.தி.மு.க.வுடன் விஜய் கூட்டணி அமைக்க இருக்கிறார்? என்றும் சமூக வலைத் தளங்களில் யூகங்கள் பற்ற வைக்கப்பட்டது.

இதற்கிடையே தமிழக வெற்றிக் கழகம் சார்பாக இதற்கு விளக்கம் அளிக்கப்பட்டு உள்ளது. இது குறித்து கட்சியின் உயர் மட்ட நிர்வாகிகள் கூறியதாவது:-

‘எங்கள் நிலைப்பாட்டை பல முறை கூறி விட்டோம். 2026-ம் ஆண்டு நடக்கும் சட்டமன்ற தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் தலைமையில் மட்டுமே கூட்டணி அமைக்கப்படும். விஜய்யை முதலமைச்சர் வேட்பாளராக ஏற்றுக்கொள்ளும் கட்சிகளுடன் மட்டுமே கூட்டணி அமைக்கப்படும். தற்போது வரை எந்தக் கட்சியுடனும் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவில்லை.

எங்கள் கட்சியின் உட்கட்டமைப்பை பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். நிர்வாகிகளையும் அறிவித்து வருகிறோம். எங்கள் தலைவர் விரைவில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செல்ல இருக்கிறார். இதற்கான பணிகள் நடந்து வருகிறது. மற்றபடி, கூட்டணி தொடர்பாக வலைத்தளங்களில் வரும் விஷயங்களுக்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## கோபிசந்த் ஹிந்துஜா தொகுத்த “ஐ ஆம்?” புத்தகத்தை வெளியிட்ட இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவர் ஸ்ரீ ஜக்தீப் தன்கர்

சென்னை, 11 பிப்ரவரி 2025: சிறப்புமிக்க துணைத் தலைவர் என்கிளேவில் அரசியல் மற்றும் வணிக வர்க்கங்களைச் சேர்ந்த புகழ்பெற்ற தலைவர்கள் குழு மற்றும் சமூக உறுப்பினர்கள் கலந்து கொண்ட ஒரு நேர்த்தியான விழாவில், பிரபல தொழில் அதிபரும் இந்துஜா குழுமத்தின் தலைவருமான திரு. கோபிசந்த் பி. இந்துஜாவின் “ஐ ஆம்?” (நான்) என்ற புத்தகத்தை வெளியிட்டார் இந்தியாவின் மாண்புமிகு துணைத் தலைவர் ஸ்ரீ ஜக்தீப் தன்கர்.

ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய இந்திய துணைத் தலைவர் ஸ்ரீ ஜகதீப் தன்கர், “இது உண்மையிலேயே ஒரு தனித்துவமான தருணம். ஸ்ரீ கோபிசந்த் பி. இந்துஜாவின் சிந்தனைமிக்க மற்றும் சிந்தனையைத் தூண்டும் ஒரு தொகுப்பு “ஐ ஆம்?” புத்தக வெளியீடாகும். பழமையான நாகரிகங்களில் ஒன்றின் தொட்டில் மற்றும் உலகளாவிய ஆன்மீக மையமான சனாதன பூமியான பாரதத்தில் நடைபெறும் இந்த வெளியீடு ஆழமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. இந்த புத்தகம் பாரதத்தின் உலகளாவிய பொருத்தத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, அனைத்து நம்பிக்கைகளிலும் காணக்கூடிய திறமை. ஞூவர்ச்சிகரமான மதமாற்றங்கள் இல்லாமல் நாம் மற்றவர்களின் உண்மையை மதிக்கலாம் மற்றும் பாராட்டலாம். ஒற்றுமை என்றால் சீரான தன்மை இல்லை. பாரததா ஒரு சரியான உதாரணம். இது வேற்றுமையில் ஒற்றுமையை எடுத்துக்காட்டுகிறது”.

“எனது கருத்தை நான் உறுதிப்படுத்துகிறேன், ஐக்கிய ராஜ்ஜியத்தின் மன்னர் மூன்றாம் சார்லஸ் இந்த ஆய்வுக் கட்டுரைகளுக்கு அங்கீகாரம் அளித்திருந்தார். நம்பிக்கை மற்றும் சகிப்புத்தன்மை மற்றும் விருப்பத்தின் அமைச்சரான ஷேக் நஹ்யான் பின் முபாரக் அல் நஹ்யான் இதைப் புகழ்ந்துள்ளார்” என்றார்.

இந்துஜா குழும நிறுவனங்கள் (இந்தியா) தலைவர் திரு. அசோக் பி. இந்துஜா தனது தொடக்க உரையில், “பல புவியியல் பகுதிகளில் பல்வேறு கலாச்சாரங்களை வழிநடத்தி, அதன் சனாதன மரபுகளைப் பேணுவது எங்கள் குடும்பத்தின் வாழ்க்கை முறையாக இருந்து வருகிறது. யூன்முக கலாச்சார புரிதலை ஊக்குவிப்பது எங்களுக்கு நம்பிக்கையின் ஒரு பொருளாக இருப்பதால் எங்கள் வணிகங்கள் செழித்துள்ளன. ஒருவரின் ஆன்மீகத்தைக் கண்டறிய மதம் ஒரு படிக்கல்லானால், ‘ஒன்றிணைக்க வேண்டிய ஒன்று’ எவ்வாறு பிரிவினையை உருவாக்குகிறது என்று ஜிபி அடிக்கடி யோசிப்பார். இந்த விஷயத்தில் பல்வேறு ஆன்மீக குருக்கள், அறிவுஜீவிகள் மற்றும் உலகத் தலைவர்களுடன் நடந்த உரையாடல்களால் ஈர்க்கப்பட்டு, இளைய தலைமுறையினருக்கு நேர்மறையாக உதவவும், உலகமயமாக்கப்பட்ட மற்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகில் அவர்களை வழிநடத்த செல்வாக்கு செலுத்தவும் இந்த புத்தகத்தை தொகுக்க ஜிபி நிர்பந்திக்கப்பட்டார்.

பர்மார்த் நிகேதன் அறக்கட்டளையின் தலைவர் சுவாமி சித்தானந்த சரஸ்வதி கூறுகையில், “கோபிசந்த் பி. இந்துஜாவின் புத்தகம் உள்ளடக்கமானது ‘நான்’ இலிருந்து ‘நாம்’ வரையிலான பயணத்தைப் பற்றியது, ஏனெனில் அப்போது தான் மனிதகுலம் நோயிலிருந்து நல்வாழ்வை நோக்கி நகர முடியும். இது உலகம் ஒரு குடும்பம் என்ற ரிக் வேதத்தின் - வசுதைவ குடும்பகம் - செய்தியை உள்ளடக்கியது”.

இந்த நிகழ்வில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல்; பிரபல சட்ட வல்லுநரும் ராஜ்யசபா எம்.பி.யுமான டாக்டர். அபிஷேக் மனு சிங்வி; பிரிட்டிஷ் உயர் ஆணையர் லிண்டி கேமரூன்; எச்டிஎஃப்சி கேபிட்டலின் நிர்வாக இயக்குநர் விபுல் ருங்தா; ஜிண்டால் ஸ்டீல் & பவர் லிமிடெட் தலைவரும் மக்களவை உறுப்பினருமான நவீன் ஜிண்டால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்கியது தொடர்பாக பா.ஜ.க. வெளியிட்டது பொய்யான பட்டியல்: தமிழக அரசு விளக்கம்

சென்னை, 11 பிப்ரவரி 2025: மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்கியது தொடர்பாக பா.ஜனதா வெளியிட்ட பட்டியல் பொய்களும், பிழைகளும் நிறைந்தவை என்று தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

மத்திய பட்ஜெட்டில் தமிழகம் வஞ்சிக்கப்பட்டதாக தி.மு.க. மற்றும் அதன் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் குற்றம் சாட்டின. இதையடுத்து தமிழக திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கியதாக பா.ஜனதாவினர் முக்கிய திட்டங்கள் அடங்கிய ஒரு பட்டியலை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டனர். இந்த விவகாரம் தொடர்பாக 2 கட்சிகளுக்கும் இடையே வார்த்தை போர் நிலவி வந்தது.

ஒருவரையொருவர் வசைபாடியதோடு, மாறி, மாறி ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுகளையும் சுமத்தி வந்தனர். இரு தரப்பினரின் கருத்துகளும் சமூக ஊடகங்களில் வேகமாக பரவியது.

இதையடுத்து இந்த விவகாரம் தொடர்பாக தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது.

தகவல் சரிபார்ப்பகம் அளித்துள்ள பதிவில் கூறப்பட்டு உள்ளதாவது:-

‘மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்கப்பட்ட சில முக்கிய திட்டங்கள்’ என சில திட்டங்களை குறிப்பிட்டு பா.ஜனதாவினர் ஒரு பொய்யான பதிவை பகிர்ந்துள்ளனர். அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள 24 திட்டங்கள் வெளிநாட்டு கடனுதவியுடன் நடைபெறும் மாநில அரசு திட்டங்களாகும்.

இவை மத்திய பட்ஜெட்டில் ‘வெளிநாட்டு உதவியோடு செயல்படுத்தும் முக்கிய திட்டங்கள்-மாநில அரசு திட்டம்’ என்ற பட்டியலில் உள்ளவையாகும்.

இந்த திட்டங்களுக்கான நிதியின் பெரும்பகுதியை உலக வங்கி போன்ற வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடம் இருந்து கடனாக மாநில அரசு பெறுகிறது. இந்த திட்டங்களுக்கு மாநில அரசும் நிதி ஒதுக்குகிறது.

மத்திய அரசு வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து கடன் பெறுவதற்கு இணைப்பாக செயல்படுகிறதே தவிர, இதற்கென்று தனியாக எந்த நிதியும் ஒதுக்கவில்லை.

பா.ஜனதா வெளியிட்ட பட்டியல் முழுக்க பொய்களும், பிழைகளும் நிறைந்தவை. மாநில அரசின் திட்டங்களையே தங்கள் திட்டங்கள் என்று குறிப்பிட்டு நிதி ஒதுக்கி இருப்பதாக பொய்யான பட்டியலை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வேவ்ஸ் செயற்கை நுண்ணறிவு போட்டிகள்

சென்னை, 11 பிப்ரவரி 2025: செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிறுவு திறன் போட்டிகளை இந்திய இணையதளம் மற்றும் மொபைல் சங்கம் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின், வடிவமைப்பாளர்கள் மற்றும் அதன் ஆர்வலர்களை ஒன்றிணைக்கும் வகையில் இந்தப் போட்டி நடத்தப்படுகிறது. படைப்பாற்றல் மற்றும் புதுமையின் எல்லைகளைக் கடந்து செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கருவிகள், தொழில்நுட்பத்தின் பயன்பாடுகளின் அடிப்படையிலான படைப்புகளை உருவாக்க பங்கேற்பாளர்கள் அழைக்கப்படுகின்றனர். முதலீட்டாளர்கள், தொழில் துறைத் தலைவர்கள் ஆகியோரிடையே நம்பிக்கைகளை வளர்க்கும் வகையிலும் செயற்கை நுண்ணறிவு தொடர்பான கலைகளின் திறனை வெளிப்படுத்தும் வகையிலும் இந்தப் போட்டி நடத்தப்படுகிறது. கலை மற்றும் தொழில்நுட்பத்தை இணைப்பதன் மூலம், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தில் இயங்கும் படைப்புகளின் மூலம் உலக அளவில் இந்தியாவை முன்னணி நாடாக நிலை நிறுத்துகிறது.

இந்தப் போட்டிகள், படைப்பாற்றலின் ஒரு அங்கமாகும். இது உலக பொழுதுபோக்கு உச்சி மாநாட்டின் ஒரு குறிப்பிடத்தக்க முயற்சியாகும். இது ஊடகங்கள், பொழுது போக்கு சம்பந்தப்பட்ட துறைகளில் புதுமை கண்டுபிடிப்புக்கான உலகளாவிய தளமாக செயல்படுகிறது. மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் இந்தப் போட்டிகளில் பங்கேற்பதற்காக 70,000 பேர் விண்ணப்பித்துள்ளனர். இதுவரை 31 போட்டிகள் தொடங்கப்பட்டுள்ளது. இது நாடுகளிடையே பரஸ்பரம் ஒத்துழைப்பு, வர்த்தக வாய்ப்புகளை உருவாக்க உதவுகிறது.